# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1982 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, கடை, அலுவலக ஊழியர்கள் (ஊழியத்துக்கமர்த்துகையும், ஊதியமும் ஒழுங்குபடுத்தல்) கூலி நிர்ணயசபைகள் (திருத்தச்) சட்டம்

---

*[1982 ஒத்தோபர் மாதம் 12 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1982, ஒத்தோபர் மாதம் 15 ஆம் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 45 தபாற் செலவு : 50

## 1982 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, கடை, அலுவலக ஊழியர்கள் (ஊழியத்துக்கமர்த்துகையும், ஊதியமும் ஒழுங்குபடுத்தல்) கூலி நிர்ணயசபைகள் (திருத்தச்) சட்டம்

[1982, ஒத்தோபர் மாதம் 12 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச.வ.—ஒ. 64/81
1496

**கடை, அலுவலக ஊழியர்கள் (ஊழியத்துக்கமர்த்துகையும், ஊதியமும் ஒழுங்குபடுத்தல்) சட்டத்தையும் கூலி நிர்ணயசபைகள் கட்டளைச் சட்டத்தையும் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1982 ஆம் ஆண்டின், 36 ஆம் இலக்க, கடை, அலுவலக ஊழியர்கள் (ஊழியத்துக்கமர்த்துகையும், ஊதியமும் ஒழுங்குபடுத்தல்) கூலி நிர்ணயசபைகள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

### பாகம் I

2. கடை, அலுவலக ஊழியர்கள் (ஊழியத்துக்கமர்த்துகையும், ஊதியமும் ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் 52 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்குஞ்செய்வதன் மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன் மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது. 129 ஆம் அத்தியாயத்தின் 52 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(2) ஓராம் உட்பிரிவின் கீழ் ஒரு தொழில்தருநர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், நீதிமன்றம் வேறு ஏதேனும் தண்டனைத்தீர்ப்புடன், மேலதிகமாக—

(அ) ஓர் ஊழியருக்கு முறையாகச் செலுத்தப்பட்டிருக்க வேண்டிய தொகை அவ்வூழியருக்குச் செலுத்தப்படாதிருக்குமிடத்து, அத்தகைய தொகைக்கும் உள்ளபடியாகச் செலுத்தப்பட்ட தொகைக்குமிடையிலான வித்தியாசத்தைக் குறிக்கின்றதென நீதிமன்றத்தினால் காணப்படக்கூடியவாறான அத்தகைய தொகையையும் (2அ) என்னும் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட மிகையிறுப்பையும் ; அல்லது

(ஆ) அவ்வூழியருக்கு வருமதியான ஊதியத்தின் பகுதி எதுவும் செலுத்தப்பட்டிராதவிடத்து, அத்தகைய ஊதியத்தைக் குறிக்கின்றதென நீதிமன்றத்தினால் காணப்படக்கூடியவாறான அத்தகைய தொகையையும் (2அ) என்னும் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட மிகையிறுப்பையும்,

செலுத்துமாறு தொழில்தருநருக்கு கட்டளையிடலாம். இவ்வுட்பிரிவின் கீழ் செலுத்தப்படவேண்டுமெனக் கட்டளையிடப்பட்ட ஏதேனும் பணத்தொகை ஒரு குற்றப்பணம்போன்று அதே முறையில் அறவிடப்படலாம்.

(2அ) இரண்டாம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் அல்லது (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் பணத்தொகையின் மீது செலுத்தப்படற்பாலதான மிகையிறுப்பு, பின்வருமாறு கணிக்கப்படுதல் வேண்டும் :—

(அ) அத்தகைய பணத்தொகை ஒரு மாதத்திற்கு மேற்பட்ட, ஆனால் மூன்று மாதங்களுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்கு நிலுவையாகவிருக்கின்றவிடத்து, அத்தகைய பணத்தொகையின் இருபது நூற்றுவிதத்திலானதொரு மிகையிறுப்பு ;

(ஆ) அத்தகைய பணத்தொகை மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட, ஆனால் ஆறு மாதங்களுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்கு நிலுவையாகவிருக்கின்றவிடத்து, அத்தகைய பணத்தொகையின் முப்பது நூற்றுவீதத்திலானதொரு மிகையிறுப்பு;

(இ) அத்தகைய பணத்தொகை ஆறு மாதங்களுக்கு மேற்பட்ட, ஆனால் பன்னிரண்டு மாதங்களுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்கு நிலுவையாகவிருக்கின்றவிடத்து, அத்தகைய பணத்தொகையின் நாற்பது நூற்றுவீதத்திலானதொரு மிகையிறுப்பு;

(ஈ) அத்தகைய பணத்தொகை பன்னிரண்டு மாதங்களுக்கு மேற்பட்ட ஒரு காலப்பகுதிக்கு நிலுவையாகவிருக்கின்றவிடத்து, அத்தகைய பணத்தொகையின் ஐம்பது நூற்றுவீதத்திலானதொரு மிகையிறுப்பு.".

## பாகம் II

136 ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவை திருத்துதல்.

3. (இப்பாகத்தில் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கூலி நிர்ணயசபைகள் கட்டளைச்சட்டத்தின் 4 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்வதன் மூலமும், அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன் மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(2) ஓராம் உட்பிரிவின்கீழ் எவரேனும் வேலையாள் தொடர்பானதொரு குற்றத்திற்கு ஒரு தொழில்தருநர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், நீதிமன்றம் வேறு ஏதேனும் தண்டனைத் தீர்ப்புடன் மேலதிகமாக—

(அ) ஒரு வேலையாளுக்கு முறையாகச் செலுத்தப்பட்டிருக்கவேண்டிய தொகை அவ்வேலையாளுக்குச் செலுத்தப்படாதிருக்குமிடத்து, அத்தகைய தொகைக்கும் உள்ளபடியாகச் செலுத்தப்பட்ட தொகைக்குமிடையிலான வித்தியாசத்தைக் குறிக்கின்றதென நீதிமன்றத்தினால் காணப்படக்கூடியவாறான அத்தகைய தொகையையும், (2அ) என்னும் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட மிகையிறுப்பையும்; அல்லது

(ஆ) அவ்வேலையாளுக்கு வருமதியான கூலிகளின் பகுதி எதுவும் செலுத்தப்பட்டிராதவிடத்து, அத்தகைய கூலிகளைக் குறிக்கின்றதென நீதிமன்றத்தினால் காணப்படக்கூடியவாறான அத்தகைய தொகையையும் (2அ) என்னும் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட மிகையிறுப்பையும்,

செலுத்துமாறு தொழில்தருநருக்குக் கட்டளையிடலாம். இவ்வுட்பிரிவின் கீழ் செலுத்தப்படவேண்டுமெனக் கட்டளையிடப்பட்ட ஏதேனும் பணத்தொகை ஒரு குற்றப்பணம்போன்று அதே முறையில் அறவிடப்படலாம்.

(2அ) இரண்டாம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் அல்லது (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பணத்

தொகையின்மீது செலுத்தப்படற்பாலதான மிகையிறுப்பு, பின்வருமாறு கணிக்கப்படுதல் வேண்டும் :—

(அ) அத்தகைய பணத்தொகை ஒரு மாதத்திற்கு மேற்பட்ட, ஆனால் மூன்று மாதங்களுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்கு நிலுவையாகவிருக்கின்றவிடத்து, அத்தகைய பணத்தொகையின் இருபது நூற்றுவீதத்திலானதொரு மிகையிறுப்பு ;

(ஆ) அத்தகைய பணத்தொகை மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட, ஆனால் ஆறு மாதங்களுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்கு நிலுவையாகவிருக்கின்றவிடத்து, அத்தகைய பணத்தொகையின் முப்பது நூற்று வீதத்திலானதொரு மிகையிறுப்பு ;

(இ) அத்தகைய பணத்தொகை ஆறு மாதங்களுக்கு மேற்பட்ட, ஆனால் பன்னிரண்டு மாதங்களுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்கு நிலுவையாகவிருக்கின்றவிடத்து, அத்தகைய பணத்தொகையின் நாற்பது நூற்று வீதத்திலானதொரு மிகையிருப்பு ;

(ஈ) அத்தகைய பணத்தொகை பன்னிரண்டு மாதங்களுக்கு மேற்பட்ட ஒரு காலப்பகுதிக்கு நிலுவையாகவிருக்கின்றவிடத்து, அத்தகைய பணத்தொகையின் ஐம்பது நூற்றுவீதத்திலானதொரு மிகையிறுப்பு.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 44 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 44 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்வதன் மூலமும், அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் இத்தால் திருத்தப்படுகிறது :—

"(3) ஓராம் உட்பிரிவின் கீழ் அல்லது (2) ஆம் உட்பிரிவின் கீழ் ஒரு தொழில்தருநர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், நீதிமன்றம், வேறு ஏதேனும் தண்டனைத் தீர்ப்புடன் மேலதிகமாக—

(அ) ஒரு வேலையாளுக்கு முறையாகச் செலுத்தப்பட்டிருக்க வேண்டிய தொகை அவ்வேலையாளுக்குச் செலுத்தப்படாதிருக்குமிடத்து, அத்தகைய தொகைக்கும் உள்ளபடியாகச் செலுத்தப்பட்ட தொகைக்குமிடையிலான வித்தியாசத்தைக் குறிக்கின்றதென நீதிமன்றத்தினால் காணப்படக்கூடியவாறான அத்தகைய தொகையையும் 4 ஆம் பிரிவின் (2அ) என்னும் உட்பிரிவில் காட்டப்பட்டவாறு கணிக்கப்பட்ட மிகையிறுப்பையும் ; அல்லது

(ஆ) அவ்வேலையாளுக்கு வருமதியான கூலிகளின் பகுதி எதுவும் செலுத்தப்பட்டிராதவிடத்து, அத்தகைய கூலிகளைக் குறிக்கின்றதென நீதிமன்றத்தினால் காணப்படக்கூடியவாறான அத்தகைய தொகையையும், 4 ஆம் பிரிவின் (2அ) என்னும் உட்பிரிவில் காட்டப்பட்டவாறு கணிக்கப்பட்ட மிகையிறுப்பையும்,

செலுத்துமாறு தொழில்தருநருக்கு கட்டளையிடலாம்".